# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

28.08.2020 வெள்ளிக்கிழமை


## வீட்டின் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக.28
யாழ்ப்பாணம், ஆனைக் கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது வாள்களுடன் வந்த இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் 2

# மக்கள் காணிகளை அபகரிக்கும் கடற்படையின் திட்டம் பிசுபிசுப்பு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மண்டைதீவில் கடும் எதிர்ப்பு

மண்டைதீவு, ஒக. 28
யாழ்ப்பாணம், மண்டைதீவுப் பகுதியில் பொதுமக்களின் காணிகளைக் கையகப்படுத்த கடற்படையினர் எடுத்த முயற்சி அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசியல் கட்சிகளின் முயற்சியாலும் இடைநிறுத்தப்பட்டது. 2



## 21 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக.28
நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உட்பட 21 உயர் பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இடமாற்றம் செய்யப்பட் 2

## அதிகாரத்தைப் பெற ஒற்றுமை அவசியம்!

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.28
தமிழ் மக்களுக்குத் தம்மைத் தாமே ஆளுகின்ற அதிகாரம் கிடைக்க வேண்டும். அந்த இலக்கை அடைய நாங்கள் அனைவரும் தொடர்ந்து ஒற்றுமையாகப் பயணித்து எங்களை நாங்களே ஆளுகின்ற அதிகாரம் கிடைக்க உழைக்க வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் சுதுமலையில் 2

## கடமையை ஏற்றார் சிறிசற்குணராஜா!



யாழ்ப்பாணம், ஒக.28
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 9ஆவது துணைவேந்தராக எஸ்.சிறிசற்குணராஜா இன்று காலை 8 மணிக்குத் தனது கடமைகளைப் 2



## தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு சேவை

### ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் அறிவிப்பு

கொழும்பு, ஒக.28
தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு தொடர்ச்சியாக விமான சேவைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. கொரோனாத் தொற்று நிலைமையை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இத்தாலி மிலன், பிரிட்டன் லண்டன், ஜப்பான் டோக்கியோ, மாலைதீவு ஆண், 2

## முகக்கவசம் இல்லையேல் தண்டம்!

கொழும்பு, ஒக.28
முகக் கவசம் அணியாது சேவையில் ஈடுபடும் பேருந்து ஊழியர்களுக்குத் தண்டம் விதிக் 2

## 3ஆம் தவணை விடுமுறை 11 நாள்களே

கொழும்பு, ஒக.28
2020ஆம் ஆண்டுக்கான பாடசாலை மூன்றாம் தவணை விடுமுறை 11 நாள்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
மூன்றாம் தவணை 2

## புதினம் தெரியுமோ?

நாடாளுமன்றத் தேர்தல் முடிஞ்சுது, வழமையா தேர்தல் முடிஞ்சதும் எம்.பிமாரை காணுறது கஸ்டம். இப்ப வழமைக்கு மாறா இங்க வடக்கில மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கூட்டம் என்ட கதை அடிக்கடி அடிபடுது. என்னடாப்பா இது எண்டு கொஞ்சம் அவதானிச்சுப் பாத்தா, இங்க பொல்லாத கூத்தெல்லாம் நடக்குது பாருங்கோ. தமிழகத்தில குவாட்டர் –பிரியாணி அரசியல் பேமஸ். அங்க இருந்து வாற திரைப்படங்கள் எல்லாத்திலயும் அப்பிடியான காட்சிகள் கட்டாயம் இருக்கும். அதை எல்லாம் பார்த்து 2

## பாலத் திருத்தப் பணியாளர் மண்ணுக்குள் சிக்கிச் சாவு!

### கிளி. பிரபந்தனாறில் சோகம்

கிளிநொச்சி, ஒக.28
கிளிநொச்சி, பிரபந்தனாறு வீதிச் சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஒருவர் மண் இடிந்து மேலே விழுந்ததில் உயிரிழந்துள்ளார். தருமபுரத்தைச் சேர்ந்த ஆ.சசிக்குமார் என்ற (வயது36) இரு பிள்ளைகளின் தந்தை ஒருவரே உயிரிழந்துள் 2



## வீட்டின் மீது...

சம்பவம் இன்று காலை நடந்துள்ளது. 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பல் இந்தத் தாக்குதலை நடந்தியுள்ளது. வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், வீட்டுக் கேற் என்பன இந்தக் கும்பலின் தாக்குதலில் சேதமடைந்துள் ளன என்று தெரிவிக்கப்பட்டது.(எ-26)

## 21 பொலிஸ்...

டுள்ளனர். அதில் உப பொலிஸ்மா அதிபரும் அடங்குவார்.
பிரதிப் பொலிஸ் அத்தியேட்சகர் ஒருவர், 10 உப பொலிஸ் அத்தியேட்ச கர்கள், 6 பொலிஸ் பரிசோதகர்கள் ஆகியோரே இடமாற்றம் செய்யப்பட் டுள்ளனர். சேவைத் தேவைகளின் அடிப்படையில் பொலிஸ் ஆணைக்கு ழுவின் ஒப்புதலுடன் இந்த இடமாற் றம் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கடமையை ஏற்றார்...

பெறுப்பேற்றுக் கொண்டார்.
யாழ்ப்பாணம் பல்கழலைக் கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, அவருக்கு மாலை அணிவித்து வரவேற்பளிக் கப்பட்டது. அதன்பின்னர் அவர் தனது அலுவலகத்தில் சுபவேளையில் கடமைக ளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் துணை வேந்தர் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான புதிய நடைமுறைகள் அடங்கிய சுற்றறிக்கை கடந்த மே மாத முற்பகுதியில் வெளியிடப்பட்டிருந் தது. அதன் அடிப்படையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காக மே 15 ஆம் திகதி பதிவாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. கிடைத்த விண்ணப்பங்களில் இருந்து சுற்றறிக்கைக்கு அமைய இடம்பெற்ற மதிப்பீ டுகளின்படி, கடந்த 12 ஆம் திகதி நடை பெற்ற விசேட பேரவை அமர்வில் வைத்து திறமை அடிப்படையில் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, பேராசிரியர் கு. மிகுந்தன், பேராசிரியர் த. வேல்நம்பி ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டு, அவர்களின் விபரங்கள் ஜனாதிபதியின் தெரிவுக்காக அனுப்பப்பட்டிருந்தன.
பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரை யின் அடிப்படையில், மூவரினது பெயர்க ளையும் கடந்த 13 ஆம் திகதி பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வி அமைச் சுக்கு அனுப்பி வைத்திருந்தது.
1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்க லைக்கழகச் சட்டத்துக்கமைவாக, ஜனாதிப திக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின்படி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் மூத்த பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என ஜனாதிபதி யின் மேலதிகச் செயலாளரால் அறிவிக்கப் பட்டிருந்தது. இந்த நிலையில் அவர் இன்று காலை தனது கடமைகளைப் பொறுப்பேற் றுக் கொண்டுள்ளார். (எ-111,20)

## மக்கள் காணிகளை....

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தில் கடந்த 30 வருடங்களாக தனியா ருக்குச் சொந்தமான 62 பரப்புக் காணியில், குறிப்பிட்ட பகுதியை இலங்கைக் கடற்படையினர் ஏற்கனவே ஆக்கிரமித்து முகாம் அமைத் துள்ளனர். அதை அண்டிய பகுதியில் 4 குடும்பத்துக்குச் சொந்தமான 62 பரப்புக் காணியை நிரந்தரமாகச் சுவீகரிப்பதற்காக கடற்படையி னர் வேலணை பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பித்தனர்.
அதன்படி யாழ்ப்பாண மாவட்ட நில அளவைத் திணைக்களத்தைக் கொண்டு காணிகளை அளவிடுவதற்கு நேற்று நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தச் சம்பவத்தை நன்கு அறிந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடற்படையின் காணி சுவீகரிப்பு முயற்சியை முறியடித்து, மக்களுக்குச் சொந்தமான காணிகளை மக்களுக்கே வழங்க வேண்டும் என்று முடிவு செய்தனர். சுவீகரிப் புக்கு எதிராக மக்களை ஒன்று திரளுமாறு ஊடகங்கள் ஊடாக கோரிக்கைகளையும் விடுத்தனர்.
அதன்படி காணி உரிமையாளர்கள் தீவுப்பகுதி சிவில் அமைப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞா னம் சிறீதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், பா.கஜதீபன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணிச் செயலாளர் குணாளன் ஆகியோர் இணைந்து சுவீகரிப்புக்கு எதிராக மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர். கடற்படைப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸார் அங்கு சூழ்ந்தபோதும், மறியல் போராட்டம் திட்டமிட்டவாறு நடந்தது. அந்த மறியல் போராட்டத்தின் மூலம் அங்கு மேற்கொள்ளப்பட ஏற்பாடாகியி ருந்த நில அளவை தடுக்கப்பட்டது. நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து திரும்பினர். “எமக்கு நிலம் வேண்டும் எமது நிலத்தை சுவீகரித்தால் உயிரை மாய்த்துக்கொள்வோம்” என்று காணி உரிமையாளர்கள் மனு ஒன்றை கூட்டாக எழுதி, அதைக் காணி அளவையாளரிடம் கூட்டாகவே கையளித்தனர்.
இந்தப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான காண்டீபன், சுகாஸ் மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். கடற்படை புலனாய் வாளர்கள், பொலிஸார், போராட்டத்தில் சூழ்ந்திருக்க எதிர்ப்பாளர்க ளின் எதிர்ப்பை அடுத்து நில அளவையாளர்கள் பின்வாங்கினர். (ஐ)

## புதினம் தெரியுமோ?

நக்கலடிச்சுச் சிரிக்கும் எங்கட சனம். இங்கயும் அங்கால தெற்கு அரசியல்வாதி களும் இப்பிடி தங்கட ஆதரவாளர்களைக் கவனிக்கிறதா கேள்விப்பட்டிருக்கிறம். என்னமோ இங்கால வடக்கில அப்பிடியான நிலைமை இல்லை எண்டு, மக்களும் புத்தி சாலியள் எண்டு கொலர இழுத்து விட்டுக் கொண்டு இவ்வளவு நாளும் திரிஞ்சம். இந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிஞ்ச பிறகு நடக்கிறதப் பாத்தா எல்லாம் தலைகீழாக் கிடக்கு. அங்க இங்க சுத்தி இப்ப இந்த பாழ்பட்ட கலாசாரம் இங்கயும் வந்திட்டு என்டதும் அதிலயும் தமிழ் தேசியப் பற்றிக் கதைக்கிற கட்சியச் சேர்ந்த சிலரே இதச் செய்யினம் என்டது தான் பெரும் வேதனை. நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில சுத்திச் சுத்தி மக்கள் சந்திப்புக்களை நடத்திய அரசியல்வாதிகள் சிலர் இப்ப தங்களுக்கு வாக்களிச்சு வெற்றிபெற வைச்சாக்களுக்கு நன்றி தெரிவிச்சு சந்திப்புக்களை நடத்தி னம். அந்தச் சந்திப்புகளில்ல தண்ணி, கொத்துறொட்டி என்ற எல்லாம் தாராளமாம். தமிழ் இளைஞர்களுக்கு போதைப் பொருள் கள் வழங்கி உணர்வுகளை மழுங்கடிங் கடிக் கினம் என்று குற்றஞ்சாட்டும் வேற, மேடை களில் முழங்குபவர்களே இப்படி தண்ணி ஊற்றி நன்றி தெரிவிக்கிறது சரியில்லை கண்டியளே. தங்களுக்கு வாக் களிச்ச மக் களுக்கு நன்றி தெரிவிக்கோனும் எண்டா, தேர்தல் காலத்தில வழங்கிய வாக்குறுதி களை நிறைவேற்ற வேண்டும். அதுதான் உண்மையான நன்றி பாருங்கோ. சம்பந்தப் பட்ட ஆக்களுக்கு இது சமர்ப்பணம்.

– பட்சி

## அதிகாரத்தைப் பெற...

அவருக்கு நடத்தப்பட்ட வரவேற்பு நிகழ்வு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தைச் சிதைக்கப் பல நடவடிக் கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அதைத் தேர்தல் காலத்தில் நாங்கள் சுட்டிக்காட்டியிருந்தோம். ஆனால் மக்கள் அதை முழுமையாகச் செவிமடுக்க வில்லை. தற்போது கூட்டமைப்புக்குச் சிறு பின்ன டைவு ஏற்பட்டிருந்தாலும், தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளுக்கும் மக்கள் வாக்களித்துள்ளனர். எமக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவில் இருந்து நாங்கள் மீண்டு வர வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள பின்னடைவு என்பது தற்காலிகமானதுதான்.
நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகப் பயணித்து எங்களை நாங்களே ஆளுகின்ற அதிகாரம் கிடைக்க உழைக்க வேண்டும். அவ்வாறு அதிகாரம் கிடைக் கும்போதுதான் எமது மக்கள் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ முடியும். என்றார். (எ-20)

## முகக்கவசம்...

கப்படவுள்ளது என்றும், அது தொடர்பான நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் மேல்மாகாண பயணிகள் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. நாட்டில் கொரோனா தொற்று காணப்படும் நிலையில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது முகக் கவசம் அணியாது பேருந்து ஊழியர்கள் சேவையில் ஈடுபடுகின்ற னர் என்று முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள் ளன. அதையடுத்து சிறப்புச் சுற்றி வளைப்புக் களை நடத்தி அவ்வாறானவர்களை இனங் காண நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சுற்றிவளைப்புத் தொடர்பில் பொலிஸாருக் குத் தெரியப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## 3ஆம் தவணை....

விடுமுறையை டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய பாடசாலை தவணை ஜனவரி மாதம் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள் ளது. கொரோனா வைரஸ் பரவல் நிலைமை காரணமாகவே விடுமுறை தினங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள் ளது. (எ)

## தேர்ந்தெடுக்கப்பட்ட..

ஜேர்மன்பிராங்போர்ட், பிரான்ஸ்பாரிஸ், ஆஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களுக்கு விமான சேவைகள் நடைபெற வுள்ள என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. இந்த இடங்களுக்கு பயணிக்க விரும்பும் பயணிகள் கொழும்பு, காலி அல்லது கண்டி யில் உள்ள விமான அலு வலகங் களை அல்லது இணையத்தளம் ஊடாக தொடர்பு கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.(எ-இ)

## பாலத் திருத்தப்...

ளார்.
வீதிச் சீரமைப்புப் பணிகளின்போது, பாலக் கட்டுமாணத் தில் ஈடுபட்டிருக்கை யில் மண் இடிந்து அவர் மீது விழுந்தது என்று தெரிவிக்கப்ப டுகின்றது.
அவரை மண்ணுக்குள் இருந்து மீட்க சக பணியாளர்கள் முயற் சித்தபோதும் அது பயனளிக்கவில்லை. அதையடுத்து அவர் இயந்திரத்தின் மூலமா கவே வெளியே எடுக்கப்பட்டார். அவரைத் தருமபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது, அவர் ஏற்க னவே இறந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் விசார ணைகளை மேற் கொண்டு வருகின்ற னர். (எ113,222)

## ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள்!

கொழும்பு, ஓக.28
கொழும்பில் ஒரே பிரவசத்தில் தாய் ஒருவர் 5 குழந்தைகளை பிரசவித்துள்ளார். கொழும்பு டி சொய்ஸா வைத்தியசாலையில் இந்த ஐந்து குழந் தைகளும் பிறந்துள்ளன. இந்த ஐவரும் பெண் குழந்தைகள் என வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சாகரிக்கா கிரிவன்தெனிய தெரிவித்துள் ளார். பெபிலியாவல பகுதியைச் சேர்ந்த 29 வயதான பெண்ணுக்கே ஐந்து குழந்தைகள் பிறந்துள்ளன. தாய் மற்றும் குழந்தைகள் ஆரோக்கியமாக உள்ள னர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



சாவகச்சேரி சந்தையில்

# உற்பத்திப் பொருள்களுக்கு கழிவு நடைமுறை நிறுத்தம்

சாவகச்சேரி,ஓக.28
சாவகச்சேரி பொதுச் சந்தையில் நீண்ட காலமாக நடைமுறையில் உள்ள உற்பத்தியாளர்களிடம், உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது, பத்துக் கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு என்னும் நடைமுறை நேற்றுடன் நிறுத்தப்படும் என்று சாவகச்சேரி நகரசபையின் விசேட அமர்வில் முடிவு செய்யப்பட்டுள்ளது. தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
தமிழ் மக்கள் தேசிய முன்னணி உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டு, அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம், நேற்று விசேட கூட்டம் நடைபெற்றது.
உற்பத்திப் பொருள்களுக்கு சந்தையில் உள்ள வியாபாரிகளால் பத்துக்கு ஒன்று எனும் விகிதத்தில் கழிவு மேற்கொள்ளப்படுவதால், உற்பத்தியாளர்கள் நஷ்டமடைகின்றனர். இதனால் உடனடியாக வியாபாரிகள் உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்யப்படும் பொருள்களுக்குக் கழிவு பெறுவது நிறுத்தப்படல் வேண்டும் எனக் கோரியிருந்தனர்.
அத்துடன் உற்பத்திப் பொருள்களை, உற்பத்தியாளர்கள் சந்தையில் வைத்து விற்பனை செய்வதற்கு உழவர் சந்தை அமைக்கப்பட வேண்டுமெனவும் கடிதத்தில் கோரியிருந்தனர்.
இந்த விடயங்கள் விசேட அமர்வில் கலந்துரையாடப்பட்டன. உற்பத்தியாளர்களிடம் பத்து வீத கழிவு பெறும் வியாபாரிகள், கொள்வனவு விலையை விட இரண்டு மூன்று மடங்கு விலை அதிகரித்து விற்பனை செய்கின்றனர். இதனால் இரவு பகல் கஷ்டங்களுக்கு மத்தியில் பயிர்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள், தமது உற்பத்திக்கு ஏற்ப பயன்பெற முடியவில்லை. அதனால் உடனடியாக சந்தைக்குக்கொண்டு வரப்படும் மண்ணுக்குள் விளையும் உற்பத்திப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய உற்பத்திப் பொருள்களுக்கு கழிவு பெறுவது நிறுத்தப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.
உற்பத்தியாளர்கள் சந்தைக்குள் அமைக்கப்படவுள்ள உழவர் சந்தையில் தமது உற்பத்திப் பொருள்களை வைத்து கழிவு வழங்காமல், வியாபாரிகளுக்கு வழங்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.
சந்தையின் மரக்கறி விற்பனை அலகில் ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள இடத்தில், உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. (க-9)

# சரணடைந்த சாரதி விளக்கமறியலில்

சாவகச்சேரி,ஓக.28
சரணடைந்த சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கடந்த வாரம் கனகம்புளியடிச் சந்தியில் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புக் பணியில் ஈடுபட்ட பொலிஸார், மீசாலை புத்தூர்ச் சந்தி வழியாகப் பயணித்த லொறியை நிறுத்துமாறு சமிக்ஞை காண்பித்துள்ளனர். லொறியை வீதியோரத்தில் நிறுத்திய சாரதி அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

இது தொடர்பாக கண்காணிப்புக் கடமையில் இருந்த பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர்.

அங்கு விரைந்த பொலிஸார் லொறியைச் சோதனையிட்டனர். அதில் சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான 39 முதிரை மரக்குற்றிகள் காணப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்த வேளை, லொறியின் சாரதியென ஒருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். விசாரணையில் அவர் தவறான தகவல்கள் வழங்கியதால், ஆள் மாறாட்டம் செய்தார் எனக் குற்றஞ்சாட்டி, பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அவரை செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், லொறியின் சாரதியைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் லொறியைச் செலுத்தி வந்தவர் எனக், கருதப்படும் நபர், சட்டத்தரணி ஊடாக பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சரணடைந்தார். சரணடைந்த அவர் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கு விசாரணையில் நபரை செப்ரெம்பர் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (க-9)



மன்னார் பேசாலை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருட உற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் பால் மற்றும் பறவைக் காவடி நேர்த்திக்கடன்களை பக்தர்கள் நிறைவேற்றினர். (க-60)

# நடமாடும் சேவை

மூளாய்,ஓக.28
அத்தியாவசியமான சட்ட ஆவணங்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கான விசேட நடமாடும் சேவை வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.
இதில் தேசிய அடையாள அட்டை மற்றும் பதிவாளர் திணைக்களத்துடன் தொடர்புடைய சேவைகளை மக்கள் பெற்றுக்கொண்டனர்.
சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஊடாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் அனுசரணையுடன், இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது. (க-121)



# விடுதிகளுக்கு முக்கிய அறிவிப்பு

சாவகச்சேரி,ஓக.28
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் அனைத்து விருந்தினர் விடுதிகளும் உடனடியாக சபையில் பதிவு செய்து, அதற்குரிய உரிமம் பெறப்படல் வேண்டுமென விசேட அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபை எல்லைக்குள் இயங்கும் விடுதிகள் பதிவுசெய்யப்படாமல் இயங்குவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதனால் விடுதிகளின் நலன்கருதி இந்த வருடத்துக்குரிய உரிமம் வழங்கப்பட வேண்டுமென உறுப்பினர்களால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என சபையின் தவிசாளர் தெரிவித்தார். (க-9)

# பிரதேச செயலகங்களில் கோவைகள் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஓக.28
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களால், கடந்த பத்து வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு மாவட்டச் செயலகத்தால் கோரப்பட்டுள்ளது.

இதனால் அவை தொடர்பான கோவைகளைத் தேடி எடுப்பதில் அலுவலர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நேற்று வரையான காலப்பகுதியில் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றம், வாழ்வாதார உதவிகள், மின்சார விநியோகம், வீடமைப்புத் திட்டங்கள், அபிவிருத்தி வேலைகள், புனர்வாழ்வுத் திட்டங்கள், சமுர்த்தி அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து வேலைத்திட்டங்களின் விவரங்களும் கோரப்பட்டுள்ளன.

இந்த விவரங்களைச் சேகரிப்பதற்கு, அந்தந்தப் பிரிவுகளில் கடமையாற்றி, ஏனைய பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களின் உதவிகள் நாடப்பட்டுள்ளன. (க-9)



# கிடங்குக்குள் ஹெரோய்ன் நுகர்ந்த நால்வர் கைது

கோப்பாய்,ஓக.28
தோட்டத்துக்கு இறைக்கும் மோட்டார் கிடங்குக்குள் இருந்து ஹெரோய்ன் போதைப்பொருள் நுகர்ந்தனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 160 மில்லிக்கிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் தோட்டத்துக்கு இறைக்கும் மோட்டார் கிடங்குக்குள் இளைஞர்கள் ஒன்று கூடி, போதைப்பொருள் பாவிப்பதாக, கோப்பாய் பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் இரகசிய தகவல் கிடைத்துள்ளது. அதை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (க-20)

# போதைப்பொருள் வர்த்தகம்: 102 வங்கிக்கணக்குகள் முடக்கம்

கொழும்பு,ஒக.28

போதைப்பொருள் வர்த்தகம் ஊடாக ஈட்டிய 2 ஆயிரத்து 643 மில்லியன் ரூபா பணத்தைப் பரிமாற்றிய, 102 வங்கி கணக்குகள் பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளன.

எனினும் குறிப்பிட்ட கணக்குகளில் தற்போது 96.7 மில்லியன் ரூபா பணமே எஞ்சியுள்ளது. அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த வங்கிக் கணக்குகளில் 90 சதவீதமானவை தனியார் வங்கிகளில் பேணப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பெரும்பாலான போதைப்பொருள் வர்த்தகர்கள், தம்முடன் நெருங்கிய தொடர்பைப் பேணியுள்ளவர்களின் பெயர்களில் வங்கிக் கணக்குகளைப் பேணியுள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மொரட்டுவை சொய்சாபுர உணவகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டை வழி நடத்திய குடு அஞ்சு என்பவர் போதைப்பொருள் வர்த்தகம் ஊடாக, ஈட்டிய 4 ஆயிரத்து 900 ரூபா பரிமாற்றப்பட்டுள்ள வங்கி கணக்கொன்று அண்மையில் மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கண்டறியப்பட்டது.

அந்த வங்கிக் கணக்கும் போகுந்தர பகுதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் பேணப்பட்டுள்ளமையும் பின்னர் தெரியவந்தது.

அத்துடன் தற்போது சிறையில் உள்ள போதைப்பொருள் வர்த்தகரான மாகந்துரே மதுஷின் ஜானாடா என்ற ஜனித் ஹசான் விமலவீரவுக்குச் சொந்தமாக ஆயிரத்து 400 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்ட வங்கிக் கணக்கும் பொலிஸாரால் கண்டறிப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# வரணிக்கு அழைக்கப்படும் தென்மராட்சி பட்டதாரிகள்

சாவகச்சேரி, ஓக. 28

பட்டதாரி நியமனம் பெற்ற தென்மராட்சி பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான ஆரம்ப நிகழ்வு வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோவிலுக்கு அருகில் உள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் இதைத் தெரிவித்தார்.

தென்மராட்சியில் 308 பட்டதாரிகள் நியமனம் பெற்றுள்ளனர். அவர்கள் அனைவரையும் உள்ளடக்க பிரதேச செயலக மண்டபம் போதிய இடவசதியுடன் இல்லை. அதனால் வரணி கலாசார மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# மதில் வீழ்ந்து சிறுமி உயிரிழப்பு

கொழும்பு,ஒக.28

மதில் வீழ்ந்து, சிறுமி உயரிழந்துள்ள சம்பவம், வெயங்கொட மெதகம்பிட்டியப் பிரதேச த்தில் பதிவாகியுள்ளது.

வெயங்கொட மெதகம்பிட்டியப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டாம் தரத்தில் கல்வி கற்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது சகோதரி உட்பட சிறுமிகளுடன் விளையாடி கொண்டிருந்த போது, இந்தத் துயரம் நடந்துள்ளது. சிறுமி கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க, இ)

# நிரந்தர நியமனம் கோரி ஆசிரியர்கள் போராட்டம்

கொழும்பு,ஒக.28

பெருந்தோட்ட உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்ற, சுமார் 600 ஆசிரியர்கள் தமக்கு இது வரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து நேற்று வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2015 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஆசிரிய உதவியாளர்களாக இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

ஏனைய மாவட்டங்களில் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டவர்கள் பயிற்சிகளை நிறைவு செய்த பின்பு, ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எனவே தங்களையும் ஆசிரியர்களாக உள்வாங்கி, நிலுவைத் தொகையையும், நிரந்தர நியம னத்தையும் பெற்றுத் தருமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். (க-இ)

# கொம்பனி வீதியில் 3 மேம்பாலங்கள்

கொழும்பு,ஒக.28

கொழும்பு கொம்பனி வீதியில் நிலவும், அதிக வாகன நெரிசலுக்குத் தீர்வாக, மூன்று மேம்பாலங்களை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொம்பனி வீதி ரயில் நிலையத்துக்கு அருகில், நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை ஆகிய பகுதியில் மேம்பாலங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக 6 பில்லியன் ரூபா செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான உள்ளூர் ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கேள்வி மனுக்களைக் கோருவதற்கு பெருந்தெருக்கள் அமைச்சர் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க,இ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# நுண்கலை மாணவர் வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்கள் நேற்று வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.



தங்களுக்கு இராமநாதன் நுண்கலைகழக பீடத்தில் அடிப்படை வசிதிகள், கற்றல் செயற்பாடுகளுக்குரிய வசதிகள் மற்றும் இசைக்கருவிகள் போன்றனவற்றில் குறைபாடு கள் நீடிக்கின்றன. தமது பரீட்சைப் பெறுபேறுகள் உரிய முறையில் வெளியிடப்படுவதில்லை என்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததோடு அவற்றை நிவர்த்தி செய்யுமாறு கோரியும் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தமது பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் உரிய இடத்துக்குத் தெரியப்படுத்தியும் எங்களுக்குரிய வசதி வாய்ப்புகள் செய்துகொடுக்கப்படவில்லை. கல்வி கற்பதற்குரிய அடிப்படை உரிமை தொடர்பில் உயர் அதிகாரிகள் பேசிக்கொள்கின்றார்கள். அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. தொழில்நுட்ப பிரிவு நீண்ட காலமாக பூட்டப்பட்டுள்ளது. அதனைத் திறந்து மாணவர்கள் பயன்படுத்துவதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்தவித பயனும் கிட்டவில்லை என்று மாணவர்கள் தெரிவித்தனர். துறைத் தலைவர் பரீட்சை புள்ளிகளை அவர் வெளியிடுவதிலும் காலம் தாழ்த்தி வருகின்றார். குறிப்பாக முதலாவது ஆண்டில் ஒரு மாணவர் பரீட்சை எழுதும்போது அவருக்கு இரண்டு பாடங்களில் சித்தி பெறவில்லை என்றால் அதற்குரிய பரீட்சை எழுத அதற்குரிய காலம் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னரே தெரியப்படுத்தப்படுகின்றது. இது ஒரு குறைபாடாக காணப்படுகின்றது. இசைத் துறைத் தலைவர் தன்னிச்சையான போக்கையும் கடைப்பிடிக்கின்றார். பரீட்சை புள்ளிகள் உடனுக்குடன் வெளியிடப்பட வேண்டும். இறுதி ஆண்டு பரீட்சை புள்ளி இரண்டு ஆண்டுகளுக்கு பின்னரே தெரியப்படுத்தப்படுகின்றது. இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று கோரினார். (த)

## திடீர் மின்தடை

# பூரண அறிக்கையின் பின்னரே நடவடிக்கை

கொழும்பு,ஒக.28

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்துண்டிப்பு தொடர்பில் ஆராய்வதற்காக, நியமிக்கப்பட்ட குழுவால் இடைக்கால அறிக்கை மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரையில் நாம் காத்திருக்க வேண்டும். இடைக்கால அறிக்கையிலுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு, மின்சக்தி அமைச்சுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள அரச திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மின்துண்டிப்பு ஏற்பட்டமைக்கான காரணம், இவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், தற்போது ஏற்பட்டுள்ள சிக்கலைத் திருத்தியமைப்பதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவையே உள்ளடக்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (க,இ)



# புதுக்குடியிருப்பு இளைஞர் கழக சம்மேளனத்தின் பொதுக்கூட்டம்

கிளிநொச்சி, ஒக.28

புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டமானது பிரதேச சம்மேளன உபதலைவர் கவின்சா தலைமையில் இடம் பெற்றது. இதன்போது 2019 ஆம் ஆண்டில் வெற்றி பெற்ற கழகங்களுக்கான வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டதுடன், சம்மேளனத்துக்கான புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும் நடைபெற்றது. அந்தவகையில் புதிய சம்மேளனத் தலைவராக மு.கலையரசன் தெரிவு செய்யப்பட்டார்.

இதன்போது சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்ற இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த விளையாட்டு உபகரணங்களுக்கான நிதியினை சம்மேளன அமைப்பாளர் ஜோன்சன், முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடம் இருந்து பெற்று வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-222)

# பாதாளக்குழு நபர் வாள்களுடன் கைது

கொழும்பு, ஒக.28

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும், கிரிந்திவெல பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 'அலெட்டட் மஞ்சு' எனப்படும் பாதாளக் குழு நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து மூன்று வாள்கள் மற்றும் மூன்று ரி-56 வகைத் தோட்டாக்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் 385 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)





முகமாலை வடக்கு புகுந்தோர் குடியிருப்பு பகுதியில் காணி துப்புரவு பணியின்போது குப்பைகளுக்கு வைக்கப்பட்ட தீ காற்றின் காரணமாக பரவியதால் அருகிலுள்ள பனைமரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. கிராமவாசிகளால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இத் தீ விபத்தில் அருகிலுள்ள வீட்டு வேலிகளும் சேதமடைந்துள்ளன. (ந-6)

# எமக்கான உணவை நாமே உற்பத்தி செய்ய வேண்டும்

## வடமாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக.28

தங்கி நிற்கும் நிலையில் இருந்த நாங்கள்எங்களுக்கான உணவினை நாங்களே உற்பத்தி செய்கின்ற நிலையை எட்டவேண்டும் என வடமாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி பண்ணையில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட வயல்விழா கண்காட்சி தொடக்க நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு காண்பிக்கும் நோக்கில் இந்த வயல் விழா அமைந்துள்ளது. காலபோகம் ஆரம்பிக்க இருக்கின்ற நிலையில் காலபோகத்தில் எவ்வாறு எமது உணவு உற்பத்தியினை மேம்படுத்த வேண்டும். அதன் ஊடாக விவசாயிகளுக்கு எவ்வாறு வருமானத்தினை மேம்படுத்த வேண்டும் மற்றும் நிலைபேறான விவசா யத்தை மேற்கொள்ளவேண்டும் என்



பதை வயல் விழாவில் காணக்கூடியதாக இருக்கின்றது.

கொவிட்-19 காலகட்டத்தில் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியான நிலையில், நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை வடமாகாணத்திலும் எடுத்துள்ளோம். குறிப்பாக நாடு முழுவதும் 16 பயிர்கள் தெரிவுசெய்யப்பட்டு 16 பயிர்களும் இலங்கை முழுவதும் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கும் வயல் விழா உதவியாக அமைந்துள்ளது.

புதிய தொழில்நுட்பங்களுடனான விவசாயமாக இஞ்சி மற்றும் மஞ்சள் பயிர்கள் காணப்படுகின்றன. தற்போது எமக்குத் தேவையான உணவுகளை இறக்குமதி செய்வது கேள்விக்குறியாக இருக்கின்றது. வெளிநாடுகளில் இருந்தே உணவுகளை இறக்குமதி செய்யும் நிலை கடந்த காலத்தில் காணப்பட்டுள்ளது. தங்கி நிற்கும் நிலையில் இருந்த நாங்கள் எங்களுக்கான உணவினை உற்பத்தி செய்கின்ற நிலையினை எட்டவேண்டும்.

கொரோனா வைரஸ் காலத்தில் மஞ்சளுக்கான பெறுமதி அல்லது தேவை அதிகரித்துள்ள நிலையில் மஞ்சள் செய்கையினையும் இங்கு காட்சிப்படுத்தியுள்ளதுடன், நஞ்சற்ற உணவினை உட்கொள்ளவேண்டும் என சேதனைச் செய்கையினையும் காட்டியுள்ளார்கள். இவை எல்லாம் எங்கள் விவ சாயத்தில் நல்ல விடயமாக அமைந்துள்ளன -என்றார். நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் உலகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார், வட மாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் வீ.பிறேம்குமார் உள்ளிட்ட மாகாண பிரதி மாகண விவசாய பணிப்பாளர்கள் அரச அதிகாரிகள் படை அதிகாரிகள் பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ந-19)








முல்லைத்தீவு மாவட்ட விவசாய திணைக்களத்தால் நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்ட 'வயல் விழா' கண்காட்சியை பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலர் பார்வையிட்டு வருகின்றார்கள். இக் கண்காட்சியில் உள்நாட்டு மரக்கறிகள், மேல்நாட்டு மரக்கறிகள், கிழங்குப் பயிர்கள், இலை மரக்கறிகள், தானியங்கள், அவரைப்பயிர்கள், எண்ணெய் பயிர்கள், பழப்பயிர்கள் மற்றும் உயர்தர நாற்று உற்பத்தி, நகர்புற வீட்டுத்தோட்ட சேதனத் தோட்டம், வீதிமுறை பயிர்செய்கை ஊடு பயிர்ச் செய்கை, காளான் வளர்ப்பு, தேனிவளர்ப்பு, அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம் பெறுமதிசேர் விவசாய நடவடிக்கை, பண்ணை இயந்திரங்களின் பாவனையினை மேம்படுத்துதல், பயிர்ப் பாதுகாப்பு, பாதுகாப்பு கூடாரத்துடன் கூடிய மரக்கறிச் செய்கை, விலங்கு வேளாண்மை உள்ளிட்ட அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பான விளக்கங்களும் விவசாய உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. (ந-19)

# அங்கொட லொக்காவின் உதவியாளர் கைது

கொழும்பு, ஒக.28

3 கிலோவுக்கு அதிகமான ஹெரோய்ன் மற்றும் ஆறு இலட்சம் ரூபாய் பணத்துடன் சந்தேக நபரொருவர் கிராண்பாஸ் ஊரு கொடவத்த பகுதியில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் இந்தியாவில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. கிராண்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரு கொடவத்த பகுதியில் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சொகுசு வான் ஒன்றில் சென்று கொண்டிருந்த சந்தேக நபரை பொலிஸார் சோதனைக்குட்படுத்தியபோது அவரிடமிருந்து 3 கிலோ கிராம் ஹெரோய்ன் , ஆறு இலட்சத்து 11 ஆயிரத்து 500 ரூபாய் பணம் மற்றும் வரவு அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கொழும்பு வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய சந்தேக நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (வ-இ)



# 2023 இல் பால் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடையும்

கொழும்பு, ஒக.28

இலங்கை 2023 ஆம் ஆண்டளவில் பால் உற்பத்தியில் ஒரு தன்னிறைவு நாடாக விளங்கும் எனக் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார். தோட்டக் கம்பனிகளுக்கும், உள்நாட்டு முதலீட்டுத் தரப்புகளுக்கும் இடையில் ஒரு விஷேட பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் 22 தோட்டக் கம்பனிகள் உள்ளன. ஒரு தோட்டக் கம்பனிக்கு ஆயிரம் பால் மாடுகளை வாங்குமாறு நாம் கூறினோம். அதே போன்று, அதற்கு தேவையான உட்கட்டமைப்பை வசதிகளை அரசாங்கம் வழங்கும். அதற்கு இணங்க, தொழில்நுட்ப அறிவு, நிவாரணம், நிதி உதவி, கால்நடைகளின் உணவு உற்பத்திக்கான நிலம் மற்றும் ஏனைய வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்.

தற்பொழுது வருடாந்தம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பால் உற்பத்தியை இதன் மூலம் 422 மில்லியன் லீற்றர்களிலிருந்து 750 மில்லியன் லீற்றர்களாக அதிகரிக்க முடியும். அதேபோல் இந்தத் திட்டத்துக்குப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கின்றோம். இதன் மூலமாக நாம் உள்ளூர் பால் உற்பத்தியாளர்களைப் பாதுகாப்போம். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு இதற்கு முன் 37% வீதமாகக் காணப்பட்டது. ஆனால் கடந்த காலத்தில் இது 7%வீதமாகக் குறைந்துள்ளது எனத் தெரிவித்தார். (வ-இ)

போதைப்பொருள் குற்றச்சாட்டு:

# கடந்த ஆறு மாதங்களில் 52 ஆயிரம் பேர் கைது

கொழும்பு, ஒக.28

இலங்கையில் கடந்த 6 மாத காலப் பகுதியில் போதைப்பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புடையோர் என 52 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களில் 30 வயதுக்கு குறைவான இளைஞர்களே அதிகளவில் உள்ளதாகவும், அவர்களில் 20 முதல் 25 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் எனவும் அந்தச் சபையின் தலைவர் விசேட வைத்தியர் லக்நாத் வெலகெதர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கைதுசெய்யப்பட்ட 52 ஆயிரம் பேரில் 24 ஆயிரம் பேர் ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டிலும், 26 ஆயிரம் பேர் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றச் சாட்டிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதிகளவானோர் பாடசாலை மாணவர்கள் என்பதால் அவர்களை விளக்கமறியலில் வைப்பதன் ஊடாக அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாவதுடன் நாட்டின் எதிர்காலமும் பாதிப்படையும். ஆகவே இது தொடர்பில் கல்வித்திட்டத்தின் ஊடான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றார். (ற-இ)

# சிறைச்சாலை காவலாளர் ஹெரோய்னுடன் கைது

கொழும்பு, ஒக.28

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் சிறைக் காவலாளர் ஒருவர் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 94 கிராம் ஹெராய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீண்டகாலம் ஹெரோய்ன் மோசடியில் ஈடுபட்டு வந்தமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனத் தெரிவித்துள்ள பொலிஸார் , மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது எனவும் தெரி வித்துள்ளனர். (ந-இ)

கொரோனாவால் பாதிக்கப்பட்ட

# உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஒக.28

கொரோனாப் பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் சேவையாளர்களுக்கு நிதி ரீதியான ஊக்குவிப்புக்களை வழங்கி அவர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நுகர்வோர், தொழிலாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வரிசெலுத்துவோர் உள்ளிட்ட பொருளாதாரத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பொருத்தமான வகையில் பரந்துபட்ட ஒழுங்குவிதிகளைக் கொண்டதும் செயற்திறன் மிக்கதுமான வரிக்கொள்கையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு கடந்த வருடம் டிசம்பர் 27 ஆம் திகதி அமைச்சரவை அனுமதியளித்திருந்தது. அதேவேளை உற்பத்தி மற்றும் சேவையில் ஈடுபடுவோர் கொரோனாப் பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் குறைந்த வருமானத்தைக் கொண்டவர்கள், சுற்றுலாத்துறைசார் தொழில் முயற்சியாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச்செய்யும் அனைத்துத் தரப்பினரையும் நிதி ரீதியில் ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி தொழில் முயற்சியாளர் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையைத் தளர்த்தும் நோக்கில் நிதிச்சந்தையில் பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

ஊட்டச்சத்து குறைபாடு:

# பாடசாலை மாணவர்களுக்கு பாலுக்குப் பதில் அரிசிக் கஞ்சி

கொழும்பு, ஒக.28

பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்துக் குறைபாட்டுக்குத் தீர்வாக ஒரு கோப்பை பாலுக்குப் பதிலாக அரிசி கஞ்சி வழங்குவதற்கு விவசாய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையில் பால் உற்பத்தி போதுமானதாக இன்மையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சரின் தலைமையில், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் இடம்பெற்ற கூட்டத்திலேயே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஊட்டச்சத்துக் குறைபாடு, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்கள் அதிகரித்து வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்குத் தீர்வாக நச்சுத்தன்மையற்ற பாரம்பரிய உள்ளூர் அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு கோப்பை கஞ்சியை வழங்குவது மிகவும் முக்கியமானது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ற-இ)

# மோசடி சாட்சி இருந்தால் பேஸ்புக்கில் பதிவிடுங்கள்

கொழும்பு,ஒக.28

போக்குவரத்துத் திணைக்களங்களில், லஞ்ச ஊழல் மோசடிகள் நடைபெற்றால், அது தொடர்பான சாட்சிகளுடன் முகப்புத்தகத்தில் பதிவேற்றுங்கள் என்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் ஜெனரல் சட்டத்தரணி சுமித் அழகக்கோன் தெரிவித்துள்ளார். எமது திணைக்களம் மோசடிக்கு ரிய நிறுவனமாகப் பெயர் பெற்றுள்ளமையை ஏற்றுக் கொள்கின்றேன். இதுவரை லஞ்ச ஊழல் எதிலும் ஈடுபடாத என்னுடைய தலைமைத்துவத்தின் கீழ், ஊழல் நடைபெறுவதை பொறுத்துக்கொள்ள முடியாது. அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் சாட்சியங்கள் காணப்படுமாயின் முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்யுமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



## ஆப்கான் வெள்ளம்; சாவு 150ஆக உயர்வு

காபூல், ஓக.28


ஆப்கானிஸ்தானில் வெள்ளப்பெருக்கினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 150 ஆக அதிகரித்துள்ளது. அந்நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. 500க்கும் அதிகமான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளன. ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன. 200க்கும் அதிகமானோர் படுகாயங்களுடன் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில் மண்ணுள் புதையுண்டுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (வ)

கொரோனாத் தடுப்பூசி;

## ஆஸ்திரேலியாவுக்கு முதற்கட்டம் வெற்றி

கான்பரா, ஓக.28

கொவிட் -19 வைரஸுக்கு எதிராக தடுப்பூசியை பரிசோதனைக்குட்படுத்தும் முதற்கட்ட நடவடிக்கை வெற்றியளித்துள்ளது என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது. தொடர்ந்தும் இது தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குயின்ட்லேன் பல்கலைக்கழகம் இந்நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. விலங்குகளைப் பயன்படுத்தி ஊசியைப் பரீட்சிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)




# பதவி விலகுகிறார் ஜப்பான் பிரதமர்

டோக்கியோ, ஓக.28

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே பதவி விலகுகிறேன் என அறிவித்துள்ளார்.

ஜப்பானின் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவரான ஷின்சோ அபே அதிக காலம் பிரதமர் பதவி வகித்தவர் என்ற பெருமையை கொண்டவர். ஜப்பானின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சியடைய உதவிய தலைவர் என்ற பெருமையையும் கொண்டவர். அவர் சில ஆண்டுகளாக, குடல் பாதிப்பு நோய் காரணமாக அவதிப்பட்டு வருகிறார். இரண்டு முறை மருத்துவ பரிசோதனைகளுக்காக மருத்துவமனைக்குச் சென்று வந்த நிலையில் அபே காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உள்ளார் எனக் கூறப்பட்டது. இந்தநிலையில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ தற்போது பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.



இது தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் தெரி வித்துள்ளதாவது, எனக்கு உடல்நல பாதிப்பு மோசமடைந்துள்ளதால் நாட்டை வழிநடத்துவதில் சிக்கல் உள்ளது. மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப செயற்பட முடிய வில்லை. எனவே எனது பதவியை ராஜினாமா செய்ய முடிவெ டுத்துள்ளேன் எனத் தெரிவித்தார். (ரி1)





# அமெரிக்காவை புரட்டிப்போட்ட லாரா புயல்

நியூயோர்க், ஓக.28

அமெரிக்காவில் லாரா புயலின் தாக்கம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் லூசியானா மற்றும் டெக்ஷாஸ் மாநிலங்களில் புயலின் தாக்கத்தினால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. லூசியானா மாநிலத்தில் மணித்தியாலத்திற்கு 280 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த புயல் காற்று வீசியுள்ளது. அங்கு குறைந்தது 6 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

160 வருடங்களின் பின் இத்தகைய பெருத் புயல்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்நிலையில் புயல் தாக்கம் மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறியுள்ளனர். ஒரு சில இடங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை இலட்சக்கணக்கான வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளன என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (வ)



# அமெரிக்காவை எச்சரிக்கும் சீனா

பீஜிங், ஓக.28

தென் சீனக் கடல் பகுதியில் சீனாவால் இரண்டு இடைத்தொலைவு ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவை வெளிப்படையாக எச்சரிக்கும் வகையில் சீனா இவ் ஏவுகணைகளை ஏவியுள்ளது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். தனது இராணுவப் பயிற்சிகளை உளவுபார்க்க அமெரிக்கா விமானத்தை அனுப்பியது என சீனா குற்றஞ்சாட்டிய நிலையில் நேற்று தென் சீனக் கடல் பகுதியில் இடைத்தொலைவு ஏவுகணைகள் ஏவப்பட்டன எனத் தகவல் வெளியாகி உள்ளது. இதில் ஒன்று விமானதாங்கிக் கப்பலை அழிக்கக்கூடியது என்று செய்தி வெளியாகியுள்ளது. இந்த இரு ஏவுகணைகளும் ஹய்னன் மாகாணம் மற்றும் பரசல் தீவுகளுக்கு இடையே ஏவப்பட்டுள்ளன. (வ)

# விசா காலத்தை நீடித்தது குவைத்

குவைத் சிட்டி, ஓக.28

குவைத்தில் இந்த மாதத்துடன் விசாக் காலம் முடிவடைபவர்களுக்கு செப்டெம்பர் 1 தொடக்கம் மூன்று மாதங்கள் விசாக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. குவைத்தின் உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் விசா அலுவலகங்கள் மூடப்பட்டதால் முதற்கட்டமாக மார்ச் முதல் மே வரையும், இரண்டாம் கட்டமாக ஜூன் முதல் ஓகஸ்ட் வரையும் நீட்டித்து உத்தரவிட்டது. தற்போது, விசாக்காலத்தை மேலும் 3 மாதங்கள் நீடித்துள்ளது. குவைத்தின் மக்கள் தொகையில் 70 வீத மக்கள் வெளிநாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



# அரை இறுதிக்கு முன்னேறினர் ஜோகோவிச், அஸரென்கா



நியூயோர்க், ஓக.28

சின்சினாட்டி பகிரங்க ரென்னிஸ் தொடாில் ஜோகோவிச், அஸரென்கா அரை இறுதிக்கு முன்னேறினர். அதே வேளை இனவெறி எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக நேற்றைய ஆட்டங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன.

சின்சினாட்டி பகிரங்க சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்துவருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் முன்னாள் வீரரான நோவக் ஜோகோவிச் (சேர்பியா) 6:3, 6:1 என்ற நேர்செட் கணக்கில் ஜெர்மனியின் லெனார்ட் ஸ்ருப்பை தோற்கடித்தார். நடப்பு சீசனில் தொடர்ச்சியாக 21 ஆவது வெற்றியை ருசித்த ஜோகோவிச் 8 ஆவது முறையாக அரை இறுதிக்குள் நுழைந்தார். இதன் மூலம் இந்த தொடரில் அதிகமுறை அரைஇறுதியை எட்டிய வீரர்களின் சாதனையை அவர் சமன்செய்தார்.

அரைஇறுதியில் ஜோகோவிச், 12 ஆம் நிலை வீரரான பாவ்டிஸ்டா அகுட்டை (ஸ்பெயின்) சந்திக்கிறார். காலிறுதியில் பாவ்டிஸ்டா அகுட் முதல் செட்டை இழந்தாலும் சரிவில் இருந்து சாதுரியமாக மீண்டு வந்து 1:6, 6:4, 6:3 என்ற செட் கணக்கில் நடப்பு சாம்பியன் டேனில் மெட்விடேவை (ரஷியா) வெளியேற்றினார். பெண்கள் ஒற்றையர் காலிறுதி ஆட்டம் ஒன்றில், இரண்டு கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஜப்பான் நட்சத்திர வீராங்கனை நவோமி ஒசாகா அரைஇறுதிக்கு தகுதி பெற்ற நிலையில், சின்சினாட்டி தொடரில் இருந்து இவர் அதிரடியாக விலகியுள்ளார். ஒரு கறுப்பின பெண் என்ற வகையில் கறுப்பு இனவெறி சம்பவத்தைக் கண்டித்து அவர் தொடரிலிருந்து விலகியுள்ளார். மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்) 7:6 (11:9), 6:2 என்ற நேர்செட்டில் துனிசியாவின் ஒன்ஸ் ஜாபிரை விரட்டியடித்து அரைஇறுதி சுற்றை அடைந்தார். (ற)



# ரென்னிஸ் சகோதரர்கள் திடீர் ஓய்வு

நியூயோர்க், ஓக.28

அமெரிக்காவின் பாப் பிரையன் மைக் பிரையன் இரட்டை சகோதரர்கள் டென்னிஸ் போட்டியில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளனர்.

சர்வதேச ரென்னிஸ் அரங்கில் இரட்டையர் பிரிவில் வெற்றிகரமான ஜோடியாக உருவெடுத்து எண்ணற்ற சாதனைகளைப் படைத்து இருக்கும் அமெரிக்காவின் பாப் பிரையன்மைக் பிரையன் இரட்டை சகோதரர்கள் ரென்னிஸ் போட்டியில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளனர்.

42 வயதான இருவரும் கூட்டாக 16 கிராண்ட்ஸ்லாம், 4 ஆண்கள் சாம்பியன்ஷிப் உள்பட 119 பட்டங்களை வாரிக் குவித்துள்ளனர். ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கமும் வென்று இருக்கிறார்கள். 438 வாரங்கள் இரட்டையர் தரவரிசையில் முதலிடத்தை அலங்கரித்த பெருமையும் இவர்களுக்கு உண்டு. ‘இன்னும் ரென்னிஸ் விளையாட ஆசை தான். ஆனால் உடலை கஷ்டப்படுத்த விரும்பவில்லை. விலகுவதற்கு இதுவே சரியான தருணம்’ என்று அவர்கள் தெரிவித்தனர். (ற)

# நவோமி ஒசாகா விலகல்

நியூயோர்க், ஓக.28

உலகின் முதற்தர ரென்னிஸ் வீராங்கனையான நவோமி ஒசாகா சின்சினாட்டி டென்னிஸ் தொடரின் அரையிறுதி போட்டிகளிலிருந்து விலகியுள்ளார்.

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் பயிற்சித்தொடரான சின்சினாட்டி ரென்னிஸ் தொடரின் ஆட்டங்கள் அமெரிக்காவின் ஓஹியோவில் இடம்பெற்று வருகின்றன.

அமெரிக்காவில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றிருந்த மற்றொரு கருப்பினத்தவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகியிருந்தார்.

இதனையடுத்து, கறுப்பினத்தவர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே சின்சினாட்டி ரென்னிஸ் தொடரின் அரையிறுதி போட்டிகளிலிருந்து நவோமி ஒசாகா விலகியுள்ளார். (ற)



# கிண்ணமே முக்கியம் கூறுகிறார் பிராவோ

தனிப்பட்ட சாதனைகளை விட கிண்ணத்தை வெல்வதே முக்கியமானது என்று பிராவோ கூறியுள்ளார்.

கரிபியன் பிரீமியர் லீக் (சி.பி.எல்.) ரி-20 கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த 13 ஆவது லீக் ஆட்டத்தில் பொல்லார்ட் தலைமையிலான டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் 6 இலக்குகள் வித்தியாசத்தில் செயின்ட் லூசியா ஜோக்ஸ் அணியை தோற்கடித்து 4 ஆவது வெற்றியை பதிவுசெய்தது. இந்த ஆட்டத்தில் 2 இலக்குகள் வீழ்த்திய டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் ஓல்ரவுண்டர் வெய்ன் பிராவோ ஆட்டநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த இலக்கையும் சேர்த்து ஒட்டுமொத்த ரி-20 போட்டிகளில் பிராவோவின் விக்கெட் எண்ணிக்கை 501 ஆக (459 ஆட்டம்) உயர்ந்தது. இதன்மூலம் ரி-20 போட்டிகளில் 500 இலக்குகள் மைல்கல்லை எட்டிய முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்தார். இந்தப் பட்டியலில் இலங்கையின் மலிங்க (390 இலக்குகள்) 2 ஆவது இடத்தில் உள்ளார்.

36 வயதான பிராவோ மேலும் தெரிவித்ததாவது,

எந்தவொரு தொடரில் விளையாடினாலும் இலக்குகள் எடுப்பதைத் தவிர கிண்ணத்தை வெல்லும் போதே மிகவும் மகிழ்ச்சியும், உற்சாகமும் அடைகிறேன். என்னை பொறுத்தவரை இதுபோன்ற தனிப்பட்ட சாதனைகளை விட கிண்ணத்தை வெல்வதே முக்கியமானது. நான், பொல்லார்ட், ரஸ்செல் ஆகியோர் இணைந்து உலகம் முழுவதும் அதிகமான ரி-20 போட்டித் தொடர்களை வென்று இருப்பதாக நினைக்கிறேன். அதற்காகத் தான் நாங்கள் விளையாடுகிறோம்-என்றார்.(ற)

# ஐ.பி.எல். வீரர்களுக்கு ஊக்கமருந்து சோதனை

புதுடில்லி, ஓக.28

ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தியாவின் 9 தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகாமைப்பிரிவு அதிகாரிகள் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் செல்லவுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

குறித்த போட்டிகளில் குறைந்தது 50 வீரர்களிடம் ஊக்கமருந்து சோதனை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போட்டி இடம்பெறும் மூன்று மைதானங்கள் மற்றும் இரண்டு பயிற்சி இடங்களிலும் ஊக்கமருந்துத் தடுப்பு கட்டுப்பாட்டு மையங்களை அமைக்குமாறு இந்திய கிரிக்கெட் சபைக்கு ஊக்கமருந்து தடுப்புப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.பி.எல். போட்டிகள் செப்ரெம்பர் 19 ஆம் திகதி முதல் நவம்பர் 10 ஆம் திகதி வரை டுபாய், அபுதாபி, சார்ஜா ஆகிய இடங்களில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 28.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.